

முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு நடிகர் சத்யராஜ் அவர்கள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று(19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு இந்து குழும இயக்குநர் என். ராம் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

### எடப்பாடி ஆட்சியில் ஓடிய ‘சுந்தரா டிராவல்ஸ்’ பேருந்துகளுக்கு பதிலாக – தற்போது

# திராவிட மாடல் ஆட்சியில் புதிய பேருந்துகள் இயக்கப்படுகிறது!

## அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பேட்டி!

அரியலூர், ஜூலை 20-

எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில் ஓடிய சுந்தரா டிராவல்ஸ் பேருந்துகளுக்கு பதிலாக, தற்போது புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது: கூட்டணிக்கு மிகப்பெரிய புதிய கட்சி வரும் என எடப்பாடி பழனிச்சாமி கூறுவதன் மூலம் அ.தி.மு.க.வின் தரத்தை அவரே தாழ்த்திக் கொண்டிருக்கிறார் என அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டியில் தெரிவித்துள்ளார்..



அரியலூர் மாவட்டம் செந்துறை ஒன்றியத்துக்கு உட்பட்ட பல்வேறு ஊராட்சிகளில் 9 கோடியே 11லட்சம் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அரசு விரைவு போக்குவரத்து கழகத்தில் டிரைவர், கண்டக்டர்களுக்கான 3200 பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் ஆன்லைனில் பெறப்பட்டு எழுத்துத் தேர்வு இந்த மாதம் நடைபெற உள்ளது. தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு நேர்முக தேர்வு நடைபெறும். அதன் பிறகு அவர்கள் பணியமர்த்தப் படுவார்கள்.

அரசு போக்குவரத்து கழக பேருந்துகளை சுந்தரா டிராவல்ஸ் என எடப்பாடி பழனிச்சாமி விமர்சனம் குறித்த கேள்விக்கு...

எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்தவர் அவர் முதலமைச்சராக இருந்த போது புதிய பேருந்துகள் வாங்காத காரணத்தினால் தான் பழைய பேருந்துகள் ஓடியது.

தற்போது எடப்பாடி பழனிச்சாமி ஓட்டக்கூடிய சுந்தரா டிராவல்ஸ்க்கு எப்படி அவர் ஓனரோ, அதே போல் ஏற்கனவே ஓடிய சுந்தரா டிராவல்ஸ்க்கும் அவரே ஓனர்.

அந்த சுந்தரா டிராவல்ஸ் பேருந்தை மாற்றுவதற்காகவே முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து நிதி ஒதுக்கி 11 ஆயிரம் புதிய பேருந்துகள் வாங்குவதற்கு அனுமதி வழங்கி 4500 பேருந்துகள் மக்களின் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. 15 ஆண்டுகள் ஓடிய பேருந்துகள் அகற்றப்பட்டு, அந்த இடங்களில் இந்த புதிய பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கிறது.

இதை பேருந்தில் பயணிக்க கூடிய அனைவரும் பார்க்கலாம். மஞ்சள் நிற பேருந்துகள் நகர்ப்புறங்களிலும், நீல நிறப் பேருந்துகள் கிராமப்புறங்களிலும் ஓடிக்கொண்டிருப்பதை மக்கள் பார்க்கலாம். அரசு விரைவு போக்குவரத்து கழகத்திற்கும் உரிய புதிய பேருந்துகள் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் போக்குவரத்து துறை மிகப்பெரிய மாற்றத்தை கண்டுள்ளது

ஓரணியில் தமிழ்நாடு இயக்க பரப்புரையின் மூலம் இதுவரை ஒரு கோடியே 35 லட்சம் பேர் திமுகவில் இணைத்துக் கொண்டுள்ளார்கள். முதலமைச்சருடைய நல்லாட்சிக்கு சான்றாக நாங்கள் போகின்ற இடத்தில் வரவேற்பு அளித்து அவர்களே திமுகவில் இணைத்து கொள்கிற காட்சியை பார்க்க முடிகிறது. எனவே தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் தமிழ்நாடு தலை நிமிர்ந்து நிற்கிறது என்பதை இது காட்டுகிறது.

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்கள் திரண்டு வந்து அவர்களின் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து வருகின்றனர். 15 துறைகளின் மூலமாக 45 சேவைகள் வழங்குவதற்கு முகாம்கள் மூலம் விண்ணப்பம் பெறப்படுகிறது. வீடு தேடி வரும் அரசு என்று முதலமைச்சர் கூறியது போல மக்களே திரண்டு வந்து மனுக்களை வழங்கி வருகிறார்கள். இந்த முகாம் நடப்பது குறித்து ஒவ்வொரு வீடாகச் சென்று மக்களுக்கு தெரிவித்து அவர்கள் தெரிவித்த கருத்துக்களை இதற்கான செயலியில் உள்ளீடு செய்கின்ற போது அவர் எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளும் வகையில் இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது மிகப்பெரிய வெற்றிகரமான நடவடிக்கையாக அமைந்துள்ளது

தமிழ்நாட்டின் மிகப்பெரிய கட்சி தங்களுடன் கூட்டணி சேருவார்கள் என்ற எடப்பாடி பேச்சு குறித்த கேள்விக்கு தமிழ்நாட்டின் நிலையை அறிந்து தான் பேசுகிறாரா? இல்லையா? என்பது தெரியவில்லை.

தமிழ்நாட்டின் மிகப்பெரிய கட்சி திராவிட முன்னேற்ற கழகம். அதற்கு அடுத்தபடியாக அதிமுக. இந்த இரண்டு கட்சிகளை தாண்டி எந்த கட்சியை பெரிய கட்சி என்று சொல்ல வருகிறார் என தெரியவில்லை.

அ.தி.மு.க.வை விட பெரிய கட்சி இருக்கிறது என்பதை அவர் சொல்ல வருகிறாரா. எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் அதிமுக கட்சியின் தரத்தை தாழ்த்திக் கொள்கிறாரா என்பதுதான் தற்போது சந்தேகமாக உள்ளது.

அவர் பேசுகின்ற போது என்ன பேசுகிறோம் என்பதை அறிந்து பேச வேண்டும். புதிதாக வருகின்ற பெரிய கட்சி என இவரே சொல்கிறார் என்றால் அதிமுகவுடைய சூழலை அவரே குறைத்து மதிப்பிடுகிறார் என்ற சந்தேகம் தான் எழுகிறது என செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த மகன் மு.க.முத்து மறைவு!

## மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா இரங்கல்!

சென்னை, ஜூலை 20-

மு.க. முத்து அவர்களின் மறைவுக்கு மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் மு.க.முத்து அவர்கள் மறைந்தார் என்ற செய்தி அறிந்து துயரமுற்றேன். தந்தையைப் போலத் திரைத் துறையில் தடம் பதித்தவர். அவரை பிரிந்து வாடும் முதலமைச்சர் உள்ளிட்ட உறவினர்களுக்கும் திமுக தொண்டர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் பேரூராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாமில், வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தா.உதயசூரியன் கலந்து கொண்டு தலைமை தாங்கி முகாமை தொடங்கி வைத்து, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களாக பெற்று, மனுதாரர்களுடன் கலந்துரையாடி விவரங்களை கேட்டறிந்து, பெறப்பட்ட மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என்று உறுதி அளித்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, உடனடியாக தீர்வு காணப்பட்ட மனுக்களின் அடிப்படையில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி, திராவிட மாடல் அரசின் பல்வேறு சாதனை திட்டங்களையும் மக்களிடத்தில் எடுத்துரைத்தார், இம்முகாமில், துரைதாகப்பிள்ளை, ரோஜாரமணி துரைதாகப்பிள்ளை, ஆஷாபி ஜாகீர்உசேன், கமரூதீன், ஆறு. கதிரவன், இரா.செல்வம், பன்னீர்செல்வம் மற்றும் அரசு உயர் அதிகாரிகள், அலுவலர்கள், தன்னார்வலர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் ஒன்றியம், பூமாரி, எடையூர், கரடி, தகடி, டி.முடியனூர் ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்களுக்கு உங்களுடன் ஸ்டாலின் எனும் சிறப்பு திட்ட முகாமினை கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தொடங்கி வைத்து, மகளிர் உரிமைத் தொகை, கலைஞர் கனவு இல்லம், மாற்றுத்திறனாளிகளுக்கான மூன்று சக்கர வாகனம், முதியோர் மற்றும் கைம்பெண் உதவித்தொகை ஆகிய விண்ணப்ப மனுக்களைப் பெற்று, அந்த விண்ணப்பங்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தி, திராவிட மாடல் அரசின் சிறப்பு திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துரைத்தார், இம்முகாமில் அரசு அதிகாரிகள், பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

### சிங்கம்புணரியில் முன்னாள் அமைச்சர்

# செ.மாதவன் பிறந்தநாள் விழா கால்பந்தாட்ட இறுதிப்போட்டி!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்குகிறார்!

சிங்கம்புணரி, ஜூலை 20 -

சிங்கம்புணரியில் முன்னாள் அமைச்சர் செ.மாதவன் அவர்களின் 92 வது பிறந்த நாளை முன்னிட்டு மாதவன் கால்பந்து கழகம் சார்பாக பாரிவள்ளல் பள்ளியில் 17 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளும் 5ம் ஆண்டு மாநில அளவிலான கால்பந்தாட்டப் போட்டி 18 ம் தேதி தொடங்கியது.

விழாவிற்கு பள்ளித் தலைவர் வெற்றிச்செல்வி ராஜமாணிக்கம் தலைமை வகித்தார். பள்ளித் தாளாளர் அருளாளன், உமா அருளாளன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி முதல்வர் சியாம் பிராங்க்ளின் டேவிட் வரவேற்றார். தேசிய கால்பந்து வீரர் கிருஷ்ணகுமார், சொர்ணசேகரன் ஆகியோர் போட்டியை தொடங்கி வைத்தனர். இறுதிப் போட்டி இன்று (20.07.2025 -ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகிறது.

இதில் மாவட்டக் கழகச் செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமை வகித்து தொடங்கி வைத்து பரிசு வழங்குகிறார்.

இதில் எம்.எம்.போர்ஜிங் மேலாண்மை இயக்குனர் வித்தியாசங்கர் கிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கின்றனர். முன்னாள் எம்.எல்.ஏ, அருணகிரி, பேரூராட்சி தலைவர் அம்பலமுத்து, துணைத் தலைவர் இந்தியன் செந்தில் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சுழற்கோப்பைகள் வழங்கப் படுகிறது. இப்போட்டியில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளை அணிகள் கலந்து கொள்கின்றனர்.

இதில் தொழிலதிபர் ஆர். எம்.எஸ்.சரவணன், ஒன்றியச் செயலாளர் பூமிநாதன், நகரச் செயலாளர் கதிர்வேல், நகர அவைத் தலைவர் சிவக்குமார், பொதுக் குழு உறுப்பினர் சோமசுந்தரம், தொழிலதிபர் கணேசன், ஆசிரியர் சுப்பிரமணியன், மேலாளர்கள் கிருஷ்ணன், சரவணன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை உடற்கல்வி ஆசிரியர்கள் கணேஷ், சின்னையா, சூரி, பள்ளி நிர்வாகத்தினர் செய்கின்றனர்.

### மரக்காணம்,திண்டிவனத்தில்

# ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கும் பணி!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திண்டிவனம் ஜூலை 19.

மரக்காணம், திண்டிவனத்தில் ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கும் பணியை விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு பணியை தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுகசார்பில் ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கும் இயக்கம் பணிசெஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் திண்டிவனம் சட்டமன்ற தொகுதி மரக்காணம் பேரூராட்சியில் ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் மரக்காணம் ரவிக்குமார் தலைமையில் நடைபெற்று வரும் இப்பணிகளை விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ நேரில் சென்று பார்வையிட்டு பணியை தொடங்கி வைத்தார் .

அப்போது திராவிட மாடல் ஆட்சியின் நான்காண்டு சாதனைகள் பொதுமக்களிடம் எடுத்துக் கூறி நான்காண்டு சாதனைப் புத்தகங்களை அவர் வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் நிர்வாகிகள் பிரபாகரன், கோபி, கலைவாணன், முத்துவேல், நரேஷ் குமார், முத்து, அஞ்சலை தேவி, தரணி,தேவதாஸ் வெற்றிவேல், கலைஞர், குப்புராஜ், கணேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திண்டிவனம் நகராட்சி:

முன்னதாக திண்டிவனம் நகராட்சி 10வது வார்டு தில்லையாடி வள்ளியம்மை நகர் பகுதியில் ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணிநடைபெற்றது.

திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் தலைமையில் நடைபெற்று வரும் பணிகளை விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று தொடங்கி வைத்தார். அப்போது திராவிட மாடல் ஆட்சியின் நான்காண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து கூறி நான்காண்டு சாதனை புத்தகங்களை அவர்வழங்கினார். அப்போதுஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கையின் போது குடும்ப பெண்களுக்கு அப்பாவாக இருந்து மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகையை வழங்கிக் கொண்டிருக்கும்

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தான் மீண்டும் தமிழ்நாட்டை ஆள வேண்டும் என பெண்கள் மன மகிழ்ச்சியுடன் கூறி தங்களைஉறுப்பினராக இணைத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் அவைத் தலைவர் ரவிச்சந்திரன் திண்டிவனம் நகர மன்ற உறுப்பினர்கள் பாஸ்கரன், ஷபியுல்லா,சந்திரன் மாவட்ட பிரதிநிதிகள்சின்னதுரை, ராஜசக்தி,மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் ஆடிட்டர் பிரகாஷ், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன், முன்னாள் நகர செயலாளர் கபிலன்,முன்னாள் நகர துணை செயலாளர் அசோக் குமார், வார்டு செயலாளர் கோவிந்தராஜ் நிர்வாகிகள் முத்து, கோபால் , சசிகலா, அமுதா, பரமேஸ்வரி, பாபு, யுவராஜ்,தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் அஜித்உள்ளிட்டநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் கிழக்கு மாவட்டம்,கம்மாபுரம் தெற்கு ஒன்றியம், கம்மாபுரம் 6வது வார்டு, பாகம் 113, பகுதியில் “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கும் பணி, கே.ஆர்.ராயர் தலைமையில் நடைபெற்றது. இதில் மகளிர் உள்ளிட்ட புதிய உறுப்பினர்களை சேர்த்தனர். க.வேல்முருகன், ரகுராமன், பிஎல்2 ஏ. அருள்தாஸ், செல்வி உள்ளிட்ட கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் உடனிருந்தனர்.